# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 12/2025

## அ.சா. 8 (LW 10)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. கொண்டையன்** | **தொழில்** | |
| த **பெயர்** | இருளப்பன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.03.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் ராஜக்காபட்டியில் குடியிருந்து நகை பாலிஸ் செய்யும் வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த ராசு என் உடன்பிறந்த தம்பி ஆவார். நான் ராசுவுடன் சுமூகமான பேச்சு வார்த்தையில்தான் இருந்தேன். ராசு பூர்வீக விட்டை கட்டியது தெரியும். அதை விற்ற விவரம் தெரியாது. கடந்த 3 ஆண்டுகள் முன்பு இரவு 07.00 மணி அளவில் அ.சா.1. எனக்கு போன் செய்து என் சகோதரர் ராசுவை கொலை செய்து விட்டார்கள் என சொன்னார். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனை போய் பார்த்தேன். அவரை பார்த்த போது கண்ணில் ஒரு குத்துக்காயம் இருந்தது. அ.சா.1.ஐ நான் விசாரித்த போது 3 வருடங்கள் முன்பாக 4,5 நபர்கள் மதிய வேளையில் வீட்டிற்குள் வந்து தன் கணவரை வெட்டி விட்டு சென்றதாக சொன்னார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலிசார் விசாரணையில் சம்பவத்தன்று அ.சா.1, 4,5 நபர்கள் வந்து தன் கணவரை வெட்டி விட்டதாக சொன்னார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பூர்வீக வீடு விற்றதில் கமிசன் பிரச்சனை 1 வது எதிரிக்கும் என் தம்பிக்கும் முன்விரோதம் இருந்ததா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1. என்னிடம் 4,5 நபர்கள் தன் கணவரை வெட்டியதாக சொல்லும்போது அந்த நபர்களின் பெயர், விவரங்கள் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.11 22:15:48 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.